தமிழ்நாடு மக்களின் உணர்வுகளுக்கு எதிராகச் செயல்படும்

# ஆளுநர் ஆர்.என்.ரவியை உடனே திரும்பப் பெறுங்கள்!

## மாநிலங்களவையில் – மு.சண்முகம் வலியுறுத்தல்!

புதுடெல்லி, பிப்.6-

தமிழ்நாட்டின் கோரிக்கைகள் அனைத்தையும் புறக்கணித்தது துரதிர்ஷ்ட வசமானது என்றும், விவசாய விளைபொருள்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலையை சட்டப்பூர்வமாக உத்தரவாதத்துடன் வழங்க வேண்டும் என்றும், தமிழக மக்களின் உணர்வுகளுக்கு எதிராக செயல்படும் ஆளுநரை திரும்பப் பெறுங்கள் என்றும், குடியரசுத் தலைவர் உரையின் மீது மாநிலங்களவையில் கழக உறுப்பினர் தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு. சண்முகம் மாநிலங்களவையில் வலியுறுத்தினார்.

03.02.2025 அன்று மாநிலங்களவையில் கழக உறுப்பினரும் தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாள ருமான மு.சண்முகம் குடியரசுத் தலைவர் ஆற்றிய உரையின் மீது பேசியது வருமாறு:

இந்திய குடியரசுத் தலைவர் அவர்கள் நாடாளுமன்ற இரு அவைகளிலும் 31.01.2025 அன்று ஆற்றிய உரையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில பிரச்சினைகளை எழுப்ப விரும்புகிறேன்.

**தமிழ்நாட்டில் இரும்புக் கால கண்டுபிடிப்புகள் :**

அவைத்தலைவர் அவர்களே, முதலாவதாக அண்மையில் ஆய்வறிக்கையில் வெளிவந்த இரும்புக் கால கண்டுபிடிப்புகளை பற்றி தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளிப்படுத்திய அறிக்கையை வேண்டு மென்றே தவிர்த்து விட்டதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இதுவரை, இரும்பு உருக்கும் தொழில்நுட்பத்தின் கண்டுபிடிப்பு கங்கை சமவெளியில் கி.மு. 1400 இல் விவசாயம், போர் மற்றும் கட்டுமானத்தில் புரட்சியை ஏற்படுத்த உதவியது என்றும், அது பெரிய குடியிருப்புகள் மற்றும் நகரங்களை ஊக்குவிக்க உதவியது என்றும் கேள்விப்பட்டோம். ஆனால் இந்தியா மற்றும் சர்வதேச நிறுவனங்களின் கார்பன் டேட்டிங் முடிவுகளின் மூலம், ஆதிச்சநல்லூர், சிவகலை அகழ்வாராய்ச்சி தளங்களிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் மூலம், தமிழ் மண்ணில் 5370 ஆண்டுகளுக்கு முன்பு உருகிய இரும்பை முதன்முதலில் பயன்படுத்தத் தொடங்கியது தமிழ்நாடு என்பதாகும். துரதிர்ஷ்டவசமாக, உங்கள் கலாச்சாரத்துறை இந்த வரலாற்று உண்மையை முற்றிலுமாக புறக்கணித்து விட்டது. மேலும் அது குடியரசுத்தலைவர் உரையிலும் குறிப்பிடப்படவில்லை.

**தமிழகத்தின் முழுமையான புறக்கணிப்பு:**

அவைத்தலைவர் அவர்களே, எங்கள் மாநிலமான தமிழ்நாடு, ஒன்றிய அரசால் முற்றிலுமாக புறக்கணிக்கப்பட்டுள்ளது என்பதைச் சொல்ல எனக்கு வருத்தமாக இருக்கிறது. நெடுஞ்சாலை பணிகள், மெட்ரோ ரயில் திட்டங்கள், ரயில்வே புதிய திட்டங்கள் மற்றும் விரிவாக்கம், விமான நிலையங்களின் மேம்பாடு மற்றும் விரிவாக்கம், நகர்ப்புற மேம்பாடு மற்றும் கிராமப்புற மேம்பாட்டில் பல்வேறு உள்கட்டமைப்புத் திட்டங்கள் ஆகியவற்றை நாங்கள் வலியுறுத்தினோம்.



ஆனால், ஒன்றிய அரசு எங்கள் கோரிக்கைகள் அனைத்தையும் புறக்கணித்துள்ளது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. இது தமிழக மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளிக்கிறது.

ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.1056 கோடி ஊதிய நிலுவைத் தொகையை விடுவிக்க வலியுறுத்தி எங்கள் தமிழக முதல்வர் அவர்கள் பிரதமருக்கு கடிதம் எழுத வேண்டிய நிர்பந்தம் என்பது மற்றொரு சிறந்த உதாரணம் ஆகும்.

**விவசாயிகள் பிரச்சினைகள்:**

கடந்த இரண்டு ஆண்டுகளாகப் போராடி வரும் நமது நாட்டில் உள்ள விவசாயிகளின் உற்பத்தி செலவு, அனைத்து விவசாய விளைபொருட்களுக்கும் சட்டப்பூர்வ உத்தரவாதத்துடன் கூடிய குறைந்தபட்ச ஆதரவு விலையை வழங்க அரசாங்கம் முன்வர வேண்டும். உரம் விலை மற்றும் பூச்சிக்கொல்லி விலைகள் போன்ற விவசாயிகளின் உள்ளீட்டுச் செலவுகள் அதிகரித்துள்ளன. மேலும் தொழிலாளர் பற்றாக்குறை உள்ளது. எனவே, அவர்கள் இயந்திரமயமாக்கலுக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். ஆனால் விவசாய நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் டிராக்டர்கள் மற்றும் சிறிய கருவிகளின் விலைகள் மிக அதிகமாக உள்ளன. இந்த இயந்திரங்கள் மீதான ஜிஎஸ்டி மற்றும் பிற வரிகளை ஒன்றிய அரசு குறைக்க வேண்டும். மேலும் இயந்திரங்களை விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்க வேண்டும்.

கரும்பு விவசாயிகளின் நலனுக்காக, குடியரசுத்தலைவர் உரையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. கரும்பு விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை. மேலும் சர்க்கரையின் விலையும் உற்பத்தி செலவை விடக் குறைவாக உள்ளது. எனவே, கரும்பு விவசாயிகளோ அல்லது சர்க்கரை ஆலை உரிமையாளர் களோ நிம்மதி அடையவில்லை. இதன் காரணமாக, பல ஆலைகள் மூடப் பட்டுள்ளது.

**தேயிலை மற்றும் காபிக்கு குறைந்தபட்ச ஆதாரவிலை**

தேயிலை மற்றும் காபி ஆகியவை ஒவ்வொரு மனிதனுக்கும் மிகவும் அவசியம். எனவே தேயிலை மற்றும் காபி அத்தியாவசியப் பொருட்களின் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும். இதனால் குறைந்தபட்ச ஆதார விலையை அவர்கள் பெறுவார்கள். இதன் மூலம், தேயிலை / காபி விவசாயிகள், வர்த்தகர் கள் மற்றும் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

**தொழிலாளர் பிரச்சினைகள்:**

அவைத்தலைவர் அவர்களே, நான் தொழிலாளர் பிரச்சினைகளுக்கு வருகிறேன். தொழிலாளர் பிரச்சினைகள் தொடர்பான அனைத்து முக்கிய விஷயங்களிலும், குறிப்பாக செயல்படுத்தப்பட உள்ள நான்கு தொழிலாளர் சட்டங்களையும் மறுஆய்வு செய்வதற்கும், பொருத்தமான திருத்தங்களைக் கொண்டு வருவதன் மூலம் அரசின் தொழிலாளர் விரோத நிலைப்பாட்டிலிருந்து தொழிலாளர் நட்புறவாக மாற்றுவதற்கும், அனைத்து தொழிற்சங் கங்களும் ஒன்றிய அரசாங்கத்தை முத்தரப்புக் கூட்டங்களை நடத்த வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

தற்போது, ESI திட்டம் ரூ.21,000 வரை சம்பளம் வாங்கும் ஊழியர்களுக்கு மட்டுமே. அனைத்து தொழிலாளர்களும் ESI திட்டத்தின்கீழ் சேர்க்கப்படும் வகையில் ஊதிய உச்சவரம்பை அதிகரிக்க வேண்டும் என்ற தொழிற்சங் கங்களின் நீண்டகால கோரிக்கை நிலுவையில் உள்ளது. அதேபோல், போனஸ் வழங்கும் சட்டத்தின்கீழ் போனஸின் உச்சவரம்பும் அதிகரிக்கப்பட வேண்டும். பணிக்கொடை செலுத்தும் தொகையை 15 நாட்களில்இருந்து 30 நாட்களாக அதிகரிக்க வேண்டும்.

E.P.F. 1995 ஓய்வூதிய திட்டத்தின் கீழ் குறைந்தபட்ச ஓய்வூதியத்தை மாதத்திற்கு ரூ.9000 ஆக உயர்த்த வேண்டும். ஏனெனில் குறைந்தபட்ச ஊதியம் ரூபாய் 18,000 ஆக உள்ளது.

மற்றொரு தகவல் என்னவென்றால், தொடக்கநிலை என்ற பெயரில், புதிய தொழில்கள் தோன்றி, அவை அரசாங்கத்திடமிருந்து அனைத்து வசதிகளையும், சலுகைகளையும் பெறுகின்றன. நிரந்தர வேலையாக இருந்தாலும், அவர்கள் ஒப்பந்தத் தொழிலாளர்களை மட்டுமே ஈடுபடுத்துகிறார்கள். வெளியாட்களைக் கொண்டே வேலை செய்கிறார்கள். தொழிலாளர்கள் சுரண்டப்படுகிறார்கள். முழு தொழில் சூழ்நிலையும் கெட்டுப்போகிறது. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, தொழிலை மூடிவிட்டு வேறு இடத்தில் தொழிலை நிறுவுகிறார்கள். அவுட் சோர்சிங் என்பது அன்றாட வாடிக்கையாகி விட்டது. மேலும் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களில் கூட இந்த நியாயமற்ற தொழிலாளர் நடைமுறைகளை பயன்படுத்துகின்றனர். அப்படியானால், தனியார் தொழில்களில் நிரந்தர தொழிலாளர்கள் எப்படி நியமிக்கப்படுவார்கள் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

ESI திட்டம் அனைத்துத் தொழிலாளர்களுக்கும், அமைப்புசாரா துறையைச் சேர்ந்தவர்கள் மற்றும் வீட்டு வேலை செய்பவர்களுக்கும் பொருந்தும் வகையில் மாற்றப்பட வேண்டும்.

தொழிலாளர் நல வாரியங்கள்:

கட்டிடம் மற்றும் பிற கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தைபோன்ற பல தொழிலாளர் நல வாரியங்கள் உள்ளன. அதில் கட்டிடம் மற்றும் கட்டுமான நடவடிக்கைகளில் இருந்து வரி அல்லது செஸ் வசூலிக்கப்படுகிறது, மேலும் உருவாக்கப்படும் நிதி கட்டுமானத் தொழிலாளர்களின் நலனுக்காக செலவிடப் படுகிறது. எனவே, கிக்(GIG) தொழிலாளர்கள், பிளாட்ஃபார்ம் தொழிலாளர்கள், வீட்டு வேலை செய்பவர்கள், மோட்டார் வாகனத் தொழிலாளர்கள், வாரியங்கள் போன்ற அமைப்புசாரா துறைகளில் உள்ள தொழிலாளர்களுக்கும் இதே போன்ற திட்டங்களை உருவாக்க வேண்டும் என்று நான் ஒன்றிய அரசை வலியுறுத்து கிறேன். இதனால் அந்தத் தொழிலாளர்களுக்கு நலத்திட்டங்களை தடையின்றி வழங்க முடியும்.

**கல்வி:**

அவைத்தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே கல்வித் துறையில் தமிழ்நாடு முன்னோடியாக உள்ளது. இதனை பொருளாதார ஆய்வறிக்கையும் கூறுகிறது. நாங்கள் சிறந்த கல்வி, தரமான கல்வி, அனைவருக்குமான கல்வி ஆகியவற்றைதமிழகத்தில் வழங்கி வருகிறோம். தொடக்க மற்றும் உயர் தொடக்கக் கல்வியில் சுமார் 100ரூ மொத்த சேர்க்கை விகிதத்துடன், 90ரூக்கும் அதிகமான கல்வியறிவுடன், தமிழ்நாடு மற்ற மாநிலங்களை விட முதலிடத்தில் உள்ளது. ஆனால் இந்த ஒன்றிய அரசு, மும்மொழிக் கொள்கையை திணிப்பதன் பெயரில், தமிழகம் பெற வேண்டிய நிதியை அவர்கள் தமிழகத்திற்கு வழங்காமல் தடுக்கிறார்கள். அதைத் தமிழ்நாடு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ் மற்றும் ஆங்கிலம் என்ற இரு மொழிக் கொள்கையையே கடைபிடிக்கிறோம். மேலும் நம் குழந்தைகள் இதனாலேயே தேசிய மற்றும் சர்வதேச அளவில் பிரகாசிக்கிறார்கள்.

சமக்ர சிக்ஷா அபியான் (SSA) இன் கீழ் 202425 நிதியாண்டிற்கான ஒன்றிய அரசிடமிருந்து தமிழக பள்ளிக்கல்வித்துறைக்கு இன்னும் ரூ.2000 கோடி கிடைக்கவில்லை. துரதிர்ஷ்டவசமாக ஒன்றிய அரசு குழந்தைகளின் கல்வியிலும், அவர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும் வகையில் செயல்படுகின்றனர்.

எனவே, சில அற்ப அரசியல் காரணங்களுக்காக நிறுத்தி வைக்கப் பட்டுள்ள நிதியை உடனே விடுவிக்குமாறு பிரதமரை நான் வலியுறுத்துகிறேன்.

**ஒரே நாடு ஒரே தேர்தல்:**

ஒரே நாடுஒரே தேர்தல் என்ற கருத்தை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். ஏனெனில் அது கூட்டாட்சி கொள்கைகளுக்கு எதிரானது மற்றும் மாநில சுயாட்சி உரிமையை மறுக்கிறது.

**கிராமப்புற மேம்பாடு:**

கிராமப்புற மேம்பாடு அமைச்சகத்தின்கீழ் பல்வேறு திட்டங்களைப் பொறுத்தவரை, அவற்றை செயல்படுத்துவதில் நிறைய குறைபாடுகள் உள்ளன என்று நான் கூறுவேன். எங்களிடம் பல மாநில ஊரக மேம்பாட்டுத் திட்டங்கள் உள்ளன, மேலும் தமிழ்நாடு கிராம வாழ்விட மேம்பாட்டுத் திட்டம், கிராமப்புற உள்கட்டமைப்புத் திட்டம் போன்ற திட்டங்களை செயல்படுத்த நிதி கோரியுள்ளன. ஆனால் அந்தக் கோரிக்கைகளை இந்த பாஜக அரசு ஏற்கவில்லை.

**மகாகும்பமேளா**

அலகாபாத் சங்கமத்தில் மகா கும்பமேளா பற்றி குடியரசுத்தலைவர் குறிப்பிட்டுள்ளார். இதே போன்ற மகாமகம் தமிழ்நாட்டின் கும்பகோணத்தில் மகாமக கும்பமேளா நடைபெற உள்ளது. இது தொடர்பாக, விழுப்புரம்தஞ்சாவூர் பிரதான ரயில் பாதையை அகலப்படுத்த வேண்டும் என்று நாங்கள் கோரிக்கை விடுத்துள்ளோம். ஆனால் இது வரை ஆய்வு மட்டுமே முடிக்கப்பட்டுள்ளது. பணிகள் இன்னும் தொடங்கப்படவில்லை. உண்மையில், இந்த பட்ஜெட்டில் தமிழ்நாட்டில் ரயில்வே திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்படவில்லை. இது மத்திய அரசால் காட்டப்படும் மாற்றாந்தாய் மனப்பான்மை இல்லையா?

**இலங்கை கடற்படையினரால் தமிழ் மீனவர்கள் மீது அடிக்கடி தாக்குதல்கள்:**

அவைத்தலைவர் அவர்களே, இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் மீது அடிக்கடி தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. அவர்களை காவலில் எடுத்து துப்பாக்கிச் சூடு நடத்துவது உட்பட பல தொல்லைகளை அனுபவிக்கிறார்கள். இது அவர்களின் வாழ்வாதாரத்தை இழக்கச் செய்கிறது. எனவே, வெளியுறவுத்துறை அமைச்சர் ராஜதந்திர வழிகள் மூலம் பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்து நிரந்தர தீர்வைக் காண வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

**மத்திய மாநில உறவுகள்:**

மத்திய மாநில உறவுகளைப் பொறுத்தவரை, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர் பதவியைக் கொண்டு இந்த பாஜக அரசு தங்கள் அரசியல் நிகழ்ச்சிகளை நிறைவேற்றுகின்ற ஒரு கருவியாகவோ அல்லது முகவராகவோ தான் நியமிக்கிறது என்று நான் கூறுவேன். தமிழ்நாட்டில் தற்போது பதவியில் இருப்பவர் அரசியலமைப்பிற்கு புறம்பான அதிகாரியாக செயல்பட்டு, சட்ட விதிகளை தவறாகப் பயன்படுத்தி, மாநில அமைச்சரவையின் ஆலோசனையைப் பெறாமல் துணைவேந்தர்களை நியமிக்கிறார். அரசியலமைப்பு அதிகாரியின் இத்தகைய அணுகுமுறையை நாங்கள் கடுமையாகக் கண்டிக்கிறோம். மேலும் தமிழக மக்களின் உணர்வுகளுக்கு எதிரான ஆளுநரின் செயல்பாடுகள் இருப்பதால், தமிழக ஆளுநரை திரும்பப் பெறுமாறு உள்துறை அமைச்சர் மற்றும் குடியரசுத்தலைவர் அவர்களை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு மு.சண்முகம் உரையாற்றி னார்.



சேலம் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட, கல்பகனூரியில் நேற்று (05.02.2025) நடைபெற்ற "மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட திட்ட முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நலத்திட்ட உதவிகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா.பிருந்தா தேவி, மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி. கே. சேகர்பாபு நேற்று (05.02.2025) சென்னை. ஓட்டேரி ஆதி படவேட்டம்மன் திருக்கோயிலில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திருப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியாராஜன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி ஜ. முல்லை. மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார். மண்டல அலுவலர் எ.எஸ். முருகன், மாநகராட்சி உறுப்பினர் திருமதி எஸ். தமிழ்செல்வி. திருக்கோயில் செயல் அலுவலர் எம். ஆச்சி சிவபிரகாசம் ஆகியோர் உள்ளனர்.

ஆர்.டி.மதன்குமார் – சி.எஸ்.எஸ்.டி.சீனிவாசன், மோரை சதீஷ்குமார், ஜி.கே. இனியன், தா.வேல் கணேசன், டி.ஜி.ஆர். மணிவண்ணன் ஏற்பாடு!

# மாதவரம் சட்டமன்றத் தொகுதியில் பாக இளைஞரணி சமூக வலைத்தள பயிற்சி!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார்! தூத்துக்குடி எஸ். ஜோயல் முன்னிலை!

சென்னை,பிப்.6-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி உட்பட்ட பகுதி, ஒன்றிய, பேரூர், பாக இளைஞர் அணி சமூக வலைத்தள பயிற்சி கூட்டம் 04.02.2025 அன்று மாதவரம் லட்சுமி புரத்தில் உள்ள ஜி.பி.எல் திருமண மண்டபத்தில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார், துணை அமைப்பாளர்கள் சி.எஸ்.எஸ்.டி.சீனிவாசன், மோரை சதீஷ்குமார், ஜிகே. இனியன், தா.வேல் கணேசன், டி.ஜி.ஆர். மணிவண்ணன் ஆகியோர் ஏற்பாட்டில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையேற்று ஆலோசனை வழங்கினார். இதில் சென்னை மண்டல பொறுப்பாளர் கழக இளைஞரணி மாநில துணை செயலாளர் தூத்துக்குடி எஸ். ஜோயல் முன்னிலை வகித்தனர்.

நிகழ்வில் தகவல் தொழில் நுட்ப அணியின் மாநில துணை செயலாளர் டாக்டர் தருண், கழக செய்தி தொடர்பாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, ஆகியோர் கலந்து கொண்டு திமுக இளைஞரணி வலைத்தள பாகப் பொறுப்பாளர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து எடுத்துரைத்தனர். தலைமை செயற்க் குழு உறுப்பினர் மிசா பா. மதிவாணன், மாவட்ட துணை செயலாளர் டி.இராம கிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர் ஜெ.ஜெய்மதன், மாதவரம் தெற்கு பகுதி செயலாளர் ஜி.துக்காராம், ஆகியோர் வரவேற்றனர்.

இதில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், சோழவரம் ஒன்றிய செயலாளர் மீ.வே கருணாகரன், புழல் ஒன்றிய பொறுப்பாளர் ச.அற்புதராஜ், வில்லிவாக்கம் ஒன்றிய செயலாளர் மோரை தயாளன், மூன்றாவது மண்டல குழு தலைவர் எஸ்.நந்தகோபால், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எஸ்.ஜே.சீனிவாசன், மணிகண்டன் மாதவரம் தொகுதி ஒருங்கிணைப்பாளர் ஹரிஷ், சுரேந்தர், திருவொற்றியூர் தொகுதி ஒருங்கிணைப்பாளர் எஸ்.ராஜேஷ் மற்றும் கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், கழக இளைஞனின் தோழர்கள் கலந்து கொண்டனர்.

வட்டப் பொறுப்பாளர் ஜம்பு முருகன் தலைமையில் - கே.கண்ணன் முன்னிலையில் - கலைஞர் நகர் தெற்குப் பகுதி

# 138 'அ' வட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்! அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

## தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. – ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. – க.தனசேகரன் பங்கேற்பு

சென்னை, பிப். 6 -

சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் தெற்குப் பகுதி 138 அ வட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் இன்று நடைபெறுகிறது. இதில் அமைச்சர் மா. சுப்பிரமணியன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார். இது குறித்து வட்டப் பொறுப்பாளர் ஜம்பு முருகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் தெற்கு பகுதி. 138அ வட்ட செயல் வீரர்கள் கூட்டம் இன்று (6.02.2025, வியாழக்கிழமை) மாலை 6.00 மணிக்கு, பிள்ளையார் கோவில் தெரு. நெ.149/80ல் உள்ள ஹோட்டல் சந்திராஸ்இன்ல் நடைபெறுகிறது. இதில் நான் (வட்டப் பொறுப்பாளர் ஜம்பு முருகன்) தலைமை தாங்குகிறேன்.

கலைஞர் நகர் தெற்கு பகுதிச் செயலாளர் கே. கண்ணன், மாவட்ட துணை செயலாளர்பா.வாசுகிபாண்டியன், பொதுக்குழு உறுப்பினர்கள் உ. துரைராஜ், பி.எஸ்.முருகேசன் எஸ்.டி.தங்கராஜ் மற்றும் ஆர்.ராமமூர்த்தி, பாரி நகர் கே.சசி, அஞ்சுகம் நகர் எம். வீரா, ஈகை கே.கருணாகரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கே.சண்முகம், ஏ. அசோக்குமார், வி.கல்பனா, கே.சுரேஷ், எம்.பாபு, எஸ். மணிகண்டன், எம்.ரமேஷ், ஆர்.அமுல்ராஜ், வி.மூர்த்தி ஆகியோர் வரவேற்கின்றனர்.

சென்னை தெற்கு மாவட்ட செயலாளர், மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. ஏ.எம்.வி. பிரபாகரராஜா எம்.எல்.ஏ., தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன், மாநில வர்த்தகர் அணி செயலாளர் பகுதி செயலாளர் காசிமுத்து மாணிக்கம், வடக்கு பகுதி செயலாளர் மு.ராசா, தொகுதி மேலிட பார்வையாளர் வே. உமாகாந்த் ஆகியோர் பேசுகின்றனர்.

பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள் & மாவட்ட அமைப்பாளர்கள்: எஸ். உமாபதி,அஜந்தா ரவி, பெ. தியாகு, அ.பாபு , சோ. செந்தில்குமார், இரா. செழியன், பூக்கடை ஆர். பழனிச்சாமி, பி.கே. குமார், அ. கதிரேசன், கே.சதீஷ்கண்ணன், ஆர். சசிகுமார், கனிமொழிதனசேகரன், நிஷாசையத் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

இக்கூட்டத்தில் வட்டத்திற்குட்பட்ட அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள். துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள்,துணைஅமைப்பாளர்கள். வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பாக முகவர்கள் கலந்து கொண்டு வட்டப் பொறுப்பாளர் ஜம்புமுருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## சென்னை வடகிழக்கு மாவட்டம்

# மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. ஆலோசனைக் கூட்டம்!

**பகுதிக் கழகச் செயலாளர் புழல் எம்.நாராயணன் வேண்டுகோள்!**

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி, சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. ஆலோசனை கூட்டம் இன்று (06.02.2025 வியாழக்கிழமை) மாலை 5 மணிக்கு, மாத்தூர் 19 வது வட்டம், இரண்டாவது பிரதான சாலையில் அமைந்துள்ள ராகவேந்திரா திருமண மண்டபத்தில் பகுதி அவைத் தலைவர் வி.திராவிட வீரன் தலைமையிலும், 19 வது வட்டக் கழகச் செயலாளர் மாத்தூர் கா.தாமரைச்செல்வன் வரவேற்புரையிலும், பகுதி நிர்வாகிகள் கே.சிவசங்கரன், ஆ.ராஜேந்திரன், எஸ்.கௌரி, ஆர்.முரளி, க. காசிநாதன், பி.தரணி, பி.நிர்மல்குமார், கே.செல்வம், நா.மோகன்குமார் நாகூரார், வி.கார்த்திகேயன், பா.சந்திரன், கே.ராஜா, வட்டச் செயலாளர்கள் கே.அங்குசாமி, இ.கண்ணப்பன், கே.கருணாகரன், பி.எஸ்.சந்துரு, வி.ஆர்.குப்பன், கவுன்சிலர் நந்தினி சண்முகம் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

அது சமயம் மாதவரம் வடக்கு பகுதிக்குட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக செயல்வீரர்கள், பொது உறுப்பினர்கள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1) 8.2.2025 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு, சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய அரசை கண்டித்து தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கண்டன உரையாற்ற வருகை தரும் பொதுக்கூட்டம், 2) 8.2.2025 அன்று நடைபெறும் மாபெரும் வேலை வாய்ப்பு முகாம், 3) கழக ஆக்கப் பணிகள்.

**புழல் எம்.நாராயணன்**

செயலாளர் - மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க.



கும்முடிப்பூண்டி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கி.வே.ஆனந்தகுமார் தலைமையில் இளைஞர் அணி பாசறை கூட்டம் குறித்து ஒன்றிய இளைஞரணி (BLA2) பாக முகவர் ஒருங்கிணைப்பு கூட்டம் நடைபெற்றது. இதில் ஒன்றிய துணை செயலாளர் கே.இ.திருமலை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி. லோகேஷ் மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர் பி.சுரேஷ், துணை அமைப்பாளர்கள் ஏ.ஜோதி, ஆர்.. ராஜேஷ், பி.தியாகராஜன், எஸ்.அந்தோணி, கே.உதயவாணன், வி.அஷோக்குமார், முன்னிலையில் ஒன்றிய இளைஞரணி (பிஎல்ஏ2) பாக முகவர்கள் கலந்து கொண்டனர்.